**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S.No. 292-2012**

**Witness PW 2**

இன்று ( 12/03/2024 ) முருகன் த/பெ. இருசன் சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வழக்கு ஆதியில் யாருக்கு பாத்தியமானது என்றால் தாத்தா லட்சமணன் என்பவருக்கு பாத்தியமானது. சொத்து லட்சமணன் என்பவருக்கு பாத்தியமானது என்பதை காட்டுவதற்கு எந்தவிதமான ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1988ம் ஆண்டு லட்சமணன் மற்றும் இருசன் ஆகியோரிடம் ரூ.1500/- பெற்றுக்கொண்டு 2ம் வாதி எனது தாயார் அவருடைய தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. இருசன் சொத்தை அடைமானம் வைத்தது பற்றி எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை அடமானம் வைத்து ரூ.1500/- எனது தாயாரிடம் கொடுத்து வாய்மொழி கிரயம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து குறித்து ஏற்பட்ட தான செட்டில்மென்ட் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 1990ல் இருசன் என்பவர் 1ம் பிரதிவாதியை காப்பாளராக நியமித்து 2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை தான செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார் என்ற விவரத்தை முதன்மை சாட்சியத்தில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இருசன் மற்றும் புட்லாயி ஆகியோர்களுக்கு பிறந்த மகன் தான் 2ம் பிரதிவாதி குமரவேல் என்றால் சரிதான். இருசன் மற்றும் புட்லாயி ஆகியோர்களுக்கு பிறந்த மகள்கள் தான் அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி என்றால் சரிதான். ஆகவே, குமரவேல், அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்கள் இருசனின் வாரிசுகள் என்றால் சரிதான். இருசனுக்கு புட்லாயி, குமரவேல், அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்கள் வாரிசுகள் என வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் என்னைவிட்டு விட்டு பெற்றுள்ளார்கள். அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் இருசனின் வாரிசுகளான அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்களை சேர்க்காததால் அத்தியவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. யாரிடம் பாகப்பிரிவினை கேட்டேன் என்று நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் எந்த பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கோரி நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை

என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை கோரி நான் எந்த பிரதிவாதிகளிடமும் கேட்கவில்லை எனறாலும் அறிவிப்பு அனுப்பப்படவிலை அதனால் வழக்கு மூலம் எழவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழகககு சொத்து சம்மந்தமாக ஆவணங்களை நகல் எடுத்து பார்த்ததாக சொல்லும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமாக வில்லங்கம் ஏதாவது பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1989க்கு முன்பே தாத்தா லட்சுமண கவுண்டர் இறந்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 1989க்கு முன்பே வாய்மொழி பாகம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமாக 1990லேயே செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படடது சம்பந்தமாக அப்போதே இந்த விவரம் தெரிந்தே நான் இந்த வழக்கை தற்போது தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு மூலம் ஏற்படுத்தவதற்காகவேண்டி அந்த விவரங்களை தற்போது தெரிந்ததாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

X

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram